1974 மார்ச் 6]

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்தத் தெய்விகப் பேரவையிலே மனிதத் தெய்வங்கள் கலந்துகொள்கின்றனவா அல்லது தெய்வலோகத்திலே உள்ளவர்கள் கலந்து கொள்கின்றனரா ?

(விடை இல்லை.)

முதியோர் இல்லங்கள்

* 310 வின.—**திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி, திருவரங்கம், மயிலை கபாலி ஆகிய கோயில்களின் உபரி நிதியில் இருந்து முதியோர் இல்லங்கள் நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: திருத்தணி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து மட்டும் முதியோர் இல்லம் ஒன்று ஆரம்பித்து நடத்தும் செயற்குறிப்பு ஒன்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரின் பரிசீலனையிலிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், பேரவையின் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று திரு. செ. கந்தப்பன் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானம். அதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிவதற்கு முன்னதாக இந்தத் தீர்மானத்தை நான் படிக்க வேண்டும். தீர்மானத்தைப்படிக்கிறேன் :